# பிறிஸ்பேன் தமிழ்ப்பாடசாலை இணை
## Brisbane Tamil School Inc.

PO Box 1041
Mt Ommaney Qld 4074

Email: bristamilschool@yahoo.com.au
Web: www.brisbanetamilschool.org

**Brisbane Campus**
Holland Park State High School
Bapaume Road, Holland Park

**Gold Coast Campus**
Southport State High School
Smith Street, Gold Coast

**Toowoomba Campus**
Darling Heights State School
Wuth Street, Darling Heights

**Brisbane Northside Campus**
Earnshaw State College, Cnr of
Earnshaw and Tufnell Rd, Banyo


## தமிழ்ப் போட்டிகள் 2024 / Tamil Competitions 2024
## போட்டியில் பங்குபற்றுவதற்கான பொது விதிமுறைகளும் தகுதிகளும்

1. கவிதை மனனப் போட்டி, வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி, பேச்சுப் போட்டி ஆகிய போட்டிகளில் நாம் எதிர்பார்க்கும் திறமைகள், மதிப்பீடு செய்யும் முறை பற்றிய விளக்கங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன. அந்த வகையில் நடுவர்களின் மதிப்பீடு அமைந்திருக்கும்.

2. போட்டியாளரின் வயது 01-07-2024 அன்று உள்ளபடி கணிக்கப்படும்.

3. போட்டியாளர்கள் தங்கள் வயதுப்பிரிவிற்கான எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றலாம். குறித்த ஒரு போட்டியாளர் தமது வயதுப் பிரிவிலும் பார்க்கக் கூடிய வயதுப் பிரிவில் நடைபெறும் போட்டிகளிலும் பங்குபற்றலாம். மேற்குறிப்பிட்ட விதிகளுக்கமையக் குறித்த ஒரு போட்டியாளர் ஏதாவது ஒரு வயதுப் பிரிவில் மட்டுமே பங்குபற்றலாம்.

4. *இந்த ஆண்டு பொட்டிகளுக்கான முடிவுகள் (வினாடி வினா, விவாதம், எழுத்தறிவுப் போட்டி தவிர) பின்வருமாறு அமையும்.*

   - 85 - 100 *புள்ளிகள் - A (மிகநன்று)*
   - *70 - 84 புள்ளிகள் - B (நன்று)*
   - *50 - 69 புள்ளிகள் - C (மத்திமம்)*
   - *0 - 49 புள்ளிகள் - பங்குபற்றினார்*

# பிறிஸ்பேன் தமிழ்ப்பாடசாலை இணை
## Brisbane Tamil School Inc.

PO Box 1041
Mt Ommaney Qld 4074

Email: bristamilschool@yahoo.com.au
Web: www.brisbanetamilschool.org

**Brisbane Campus**
Holland Park State High School
Bapaume Road, Holland Park

**Gold Coast Campus**
Southport State High School
Smith Street, Gold Coast

**Toowoomba Campus**
Darling Heights State School
Wuth Street, Darling Heights

**Brisbane Northside Campus**
Earnshaw State College, Cnr of
Earnshaw and Tufnell Rd, Banyo


# வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்

1. போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
2. போட்டியாளரின் வாய்மொழித் தொடர்பாற்றல் திறன் பின்வரும் அம்சங்களில் கவனிக்கப்படும்.

   - **உச்சரிப்பு** 20
   - **சொற்பிரயோகம்** 20
   - **உரையாடும் திறன்** 40
   - **உரையாடலில் பங்குபற்றும் நிலை** 20

3. **உச்சரிப்புத் திறன் (20)**
   - பிராந்தியப் பேச்சு வழக்கு, அதாவது இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் உச்சரிப்புகளும், அவர்களது பேச்சு வழக்குகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.
   - முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, ∴ ண, ன, ந, ∴ ற, ர, ட வேறுபாடுகள்.
   - வல்லின, மெல்லின வேறுபாடு அறிந்து தெளிவாக உரையாடுதல்.
   - தூய தமிழ் உச்சரிப்பு (As opposed to English Accent).
   - சொற்களை விழுங்காது உரையாடுதல்.

4. **சொற்பிரயோகம் (20)**
   - தெளிவான, தூய தமிழ் மொழி நடையாக உரையாடல் இருத்தல் வேண்டும்.
   - ஒரு தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கில வார்த்தை பயன்படுத்தினால் அதற்கு புள்ளிகள் குறைக்கப்படும். (உதாரணமாக: பந்து என்பதற்குப் பதிலாக **`Ball'** என்று பாவிப்பது தவிர்க்கப்பட வேண்டும்).
   - ஒரு ஆங்கிலச் சொல்லுக்கு உரிய தமிழ் பதம் இல்லாதவிடத்தில் அதே சொல்லை அதே உச்சரிப்புடன் பயன்படுத்தலாம் உதாரணம்: Australia, calculator, Video, DVD, CD எனும் பொதுப் பாவனையிலுள்ள சொற்கள் ஏற்கப்படும்.
   - கேள்விகள் விளங்காவிட்டால், போட்டியாளர் கேள்வியை மீண்டும் ஒரு முறை வினாவும்படி கேட்கலாம். அப்படியும் கேள்விகள் விளங்காத சந்தர்ப்பத்தில், வேறு தமிழ்ச் சொல்லுடன் சற்று இலகு தமிழில் கேட்கப்படலாம்.

5. உரையாடும் திறன் **(40)**
   - சரளமாக உரையாடும் தன்மை.
   - பல விதமான வினாக்களுக்கும் சரியான அளவான பதில் அளிக்கும் தன்மை.
     - விரிவான பதில் எதிர் பார்க்கப்படும் (Open ended question) வினா,: உங்களுடைய மறக்கமுடியாத ஒரு சம்பவம் பற்றி கூறுங்கள்?
     - சுருக்கமான பதில் எதிர்பார்க்கப்படும் (Close ended question) வினா: உங்களுக்குப் பிடித்த ஒரு பறவையின் பெயரைச் சொல்லுங்கள்?
     - அநாவசியமான, அளவிற்கதிகமான, அதிகப்பிரசங்கித்தனமான உரையாடலுக்கும், வெட்டொன்றாக அமையும் ஒரு வரிப் பதில்களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.
     - சைகைகளினால் (தலையாட்டல், கை அசைத்தல் மூலம்) வழங்கப்படும் பதில்களுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும்.

6. உரையாடலில் பங்குபற்றும் நிலை **(20)**

- ❖ மண்டபத்துள் நுழையும் போதும், வெளியேறும் போதும், ஆசனத்தில் அமர்ந்திருக்கும் போதும் சரியான நிலையில் தம்மை வைத்திருத்தல். (நெளிதல், வளைதல்களைத் தவிர்த்தல்)
- ❖ அடக்கமாகவும், சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து உரையாடல்.
- ❖ உரையாடலை ரசித்துப் பங்குகொள்ளும் தன்மை. அத்துடன் உணர்ச்சிகளுக்கு சரியான முகபாவனைகள் காட்டப்பட வேண்டும்.
- ❖ போட்டியாளர்கள் நடுவர்களை பார்த்து (good eye contact), தன்னம்பிக்கையுடன், உரையாடுதல். (குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ, நடுவர்களில் ஒருவரை மட்டும் பார்ப்பதையோ, நிலத்தை, கூரையை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல் வேண்டும். உரையாடலின் போதும் கேள்விகள் கேட்கப்படும் போதும் அலட்சியமாக இருப்பதைத் தவிர்த்தல் வேண்டும்)
- ❖ கேள்வி கேட்கப்படும் போது குறுக்கீடு செய்யக்கூடாது. குறுக்கீடு செய்வதனால் கேள்வியை அவதானிக்காது, திரும்பவும் கேள்வியைக் கேட்டால் அதற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

பிறிஸ்பேன் தமிழ்ப்பாடசாலை இணை
Brisbane Tamil School Inc.

PO Box 1041
Mt Ommaney Qld 4074

Email: bristamilschool@yahoo.com.au
Web: www.brisbanetamilschool.org

**Brisbane Campus**
Holland Park State High School
Bapaume Road, Holland Park

**Gold Coast Campus**
Southport State High School
Smith Street, Gold Coast

**Toowoomba Campus**
Darling Heights State School
Wuth Street, Darling Heights

**Brisbane Northside Campus**
Earnshaw State College, Cnr of
Earnshaw and Tufnell Rd, Banyo

# கவிதை மனனப் போட்டிக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்

1. போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.

2. போட்டிக்குக் கொடுக்கப்படும் கவிதைகளை மனனஞ் செய்து கூறல் வேண்டும். அவற்றின் பொருளைக் கூறவேண்டியதில்லை.

3. கவிதையாக ஒப்புவிக்க வேண்டுமே தவிர அதன் தொடர்ச்சியாக பாடலாகவோ நடனமாகவோ செய்தால் புள்ளிகள் குறைக்கப்படும்.

4. போட்டியின் போது பின்வரும் அம்சங்கள் கவனிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| ➢ **உச்சரிப்பு** | **25** | ➢ **பொருளுணர்ந்து கூறுதல்** | **25** |
| ➢ **சபைமரபும் ஆதிக்கமும்** | **25** | ➢ **மனனஞ் செய்யும் திறமை** | **25** |

5. உச்சரிப்புத் திறன் **(25)**
   - ❖ முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, ∴ ண, ன, ந, ∴ ற, ர, ட வேறுபாடுகள் - வல்லின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்.
   - ❖ தூய தமிழ் உச்சரிப்பு **(As opposed to English accent)**
   - ❖ சொற்களை விழுங்காது ஒப்புவித்தல.
   - ❖ குழந்தைகளின் மழலைத் தமிழுக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது.

6. பொருள் உணர்ந்து ஒப்புவிக்கும் திறன் **(25)**
   - ❖ பொருத்தமான முறையில் சொற்களைப் பிரித்தல்.
   - ❖ ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்திப் பாடலை ஒப்புவித்தல்.
   - ❖ வரிகளுக்குத் தகுந்த உணர்ச்சி.

7. சபைமரபு - ஆதிக்கத்திறன் **(25)**
   - மண்டபத்துள் நுழையும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையிலே தம்மை வைத்திருத்தல். (நெளிதல், வளைதல் போன்றவற்றைத் தவிர்த்தல் வேண்டும்)
   - அடக்கமாகவும் தன்னம்பிக்கையுடனும் சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து கவிதையை ஆரம்பித்தல். ஆரம்பத்திற் கொடுக்கப்பட்ட வசனத்தை மட்டுமே பாவித்தல் வேண்டும். மிகைப்படுத்தப்பட்ட வசனங்களுக்கு மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.
   - கவிதையை ஒப்புவிக்கும்போது உடலை நேராகவும் தளர்வாகவும் வைத்திருத்தல். (விறைப்பாக நிற்பதையும் செயற்கை அபிநயங்களையும் தவிர்த்தல்)
   - சபையில் உள்ள அனைவரையும் பார்த்து ஒப்புவித்தல்.(குறிப்பிட்ட ஒருவரைப் பார்ப்பதையோ நடுவர்களை மட்டும் பார்ப்பதையோ, நிலம், சுவர், கூரை ஆகியவற்றை மட்டும் பார்ப்பதையோ தவிர்த்தல்.
   - முக பாவனை: கவிதையின் பொருளை அனுபவித்து, இரசித்து ஒப்புவிக்கும் பாங்கு
   - முக்கியமாகக் கவிதையைக் கவிதை நடையிற் கூறவேண்டும்.

8. மனனஞ் செய்யும் திறன் **(25)**
   - சொற்களைத் தவறவிடாது, மாற்றாது முழுவதையும் ஒப்புவித்தல்.
   - சரளமான ஆற்றொழுக்கான ஒப்புவிப்பு.
   - ***எழுத்துப் பிரதியையோ துணைக்குறிப்பையோ பார்த்து ஒப்புவிக்கமுடியாது. அவ்வாறு செய்தால் அதற்கு தரம் 'D or Participant' வழங்கப்படும் (அதாவது தரம் A , B, C வழங்கப்படமாட்டாது)***
   - கவிதை வரியை மறந்து போகுமிடத்து, நடுவரில் ஒருவர் போட்டியாளர் விட்ட இடத்திலிருந்து தொடங்க உதவலாம். அவ்வாறு உதவி பெறுமிடத்து, புள்ளிகள் குறைக்கப்படும்.
   - போட்டி நடைபெறும் வேளையில் பார்வையாளர்கள் (பெற்றோர்) உதவி செய்யக்கூடாது. அவ்வாறு உதவி பெறுமிடத்து, புள்ளிகள் குறைக்கப்படும்.

9. போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டிகளில் இருந்து விலக்கப்படுவார். எமது *நடுவர்களின்* தீர்ப்பே இறுதியானது.

# பிறிஸ்பேன் தமிழ்ப்பாடசாலை இணை
## Brisbane Tamil School Inc.

PO Box 1041
Mt Ommaney Qld 4074

Email: bristamilschool@yahoo.com.au
Web: www.brisbanetamilschool.org

**Brisbane Campus**
Holland Park State High School
Bapaume Road, Holland Park

**Gold Coast Campus**
Southport State High School
Smith Street, Gold Coast

**Toowoomba Campus**
Darling Heights State School
Wuth Street, Darling Heights

**Brisbane Northside Campus**
Earnshaw State College, Cnr of
Earnshaw and Tufnell Rd, Banyo


## பேச்சுப் போட்டிகளுக்கான விதிமுறைகளும் விளக்கங்களும்

1. போட்டியாளர்கள் பங்குகொள்ளும் ஒழுங்கு சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.

2. போட்டியாளரின் பேசும் திறன் பின்வரும் அம்சங்களில் கவனிக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| ➢ **உச்சரிப்பு** | 25 | ➢ **பொருளுணர்ந்து கூறுதல்** | 25 |
| ➢ **சபைமரபும் ஆதிக்கமும்** | 25 | ➢ **மனனஞ் செய்யும் திறமை** | 25 |

3. உச்சரிப்புத் திறன் **(25)**
   - முக்கிய எழுத்து வேறுபாடுகள்: ழ, ல, ள, ∴ ண, ன, ந, ∴ ற, ர, ட வேறுபாடுகள் - வல்லின, மெல்லின வேறுபாடுகளையும் அறிந்திருக்க வேண்டும்.
   - தூய தமிழ் உச்சரிப்பு (அன்றாட பேச்சுத் தமிழ் அல்லாத பேச்சு)
   - சொற்களை விழுங்காது பேசுதல் (குறிப்பாக வசனத்தின் இறுதியில் வரும் சொற்கள்)

4. பொருள் உணர்ந்து ஒப்புவிக்கும் திறன் **(25)**
   - பொருத்தமான முறையில் சொற்களைப் பிரித்தல்
   - ஏற்ற இறக்கங்களோடு முக்கியமான சொற்களை அழுத்தி உச்சரித்துப் பேசுதல்
   - வினா, வியப்பிசைக்குறி வரும் இடங்களில் தகுந்தவாறு கையாளுதல் (உ-ம்: "அது எங்கே ? " என்பதை "அது எங்கே" போலப் பேசுதல் ஆகாது)
   - வசனங்களுக்குத் தகுந்த உணர்ச்சி: (மிகையான உணர்ச்சிகள், முரணான சைகைகள், செயற்கையான அவசியமற்ற அபிநயங்கள் போன்றவற்றிற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

5. சபைமரபு - ஆதிக்கத்திறன் **(25)**
   - மண்டபத்துள் நுழையும் போதும், வெளியேறும் போதும் சரியான நிலையில் தம்மை வைத்திருத்தல்.
   - அடக்கமாகவும், தன்னம்பிக்கையுடனும் சபையையும் நடுவர்களையும் மரியாதை செய்து பேச்சை ஆரம்பித்தல்
   - பேசும்போது உடலை நேராகவும், தளர்வாகவும் வைத்திருத்தல்.
   - சபையில் உள்ள அனைவரையும் பார்த்து ஒப்புவித்தல்.
   - முகத்தில் புன்னகை: பேச்சின் பொருளை அனுபவித்து, ரசித்து பேசும் பாங்கு.
   - தகுந்த வேகத்துடன் பேச்சை ஒப்புவித்தல்.

6. மனனஞ் செய்யும் திறன் **(25)**

- ❖ வசனங்களையோ பந்திகளையோ தவறவிடாது பேச்சு முழுவதையும் கூறுதல்.
- ❖ ***எழுத்துப் பிரதியையோ துணைக்குறிப்பையோ பார்த்து ஒப்புவிக்கமுடியாது. அவ்வாறு செய்தால் அதற்கு தரம் 'D or Participant' வழங்கப்படும் (அதாவது தரம் A , B, C வழங்கப்படமாட்டாது)***
- ❖ வசனத்தை மறந்து போகுமிடத்து, நடுவரில் ஒருவர் போட்டியாளர் தொடர்வதற்கு உதவி செய்யலாம். அவ்வாறு உதவி பெறுமிடத்து, புள்ளிகள் குறைக்கப்படும்.
- ❖ சரளமான ஆற்றொழுக்கான பேச்சு.
- ❖ போட்டி நடைபெறும் வேளையில் பிறரின் உதவி பெறக்கூடாது. அவ்வாறு உதவி பெறுமிடத்து, புள்ளிகள் குறைக்கப்படும்.
- ❖ போட்டி விதிமுறைகளை மீறும் போட்டியாளர் அந்தந்தப் போட்டிகளில் இருந்து விலக்கப்படுவார். எமது நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**Acknowledgement:**

The Brisbane Tamil School acknowledge the Australian Society of Graduate Tamils (ASoGT) for guiding us in this document preparation.